சுற்றுநிருபம் - **NP/01/2007**

கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்
உட்துறைமுக வீதி,
திருகோணமலை.
13.02.2007

வடக்கு மாகாணத்திலுள்ள சகல
கூட்டுறவு நிறுவனங்களின் தலைவர்களுக்கும்.

2007 – பகிரங்க விடுமுறை

1972ம் ஆண்டின் 12ம் இலக்க கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட 169/8ம் இலக்க 1981.12.01ந் திகதிய, கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு ஒழுங்குவிதியின் 67வது பிரிவிற்கிணங்க கூட்டுறவு ஊழியர்களுக்குரியதான பொது விடுமுறை தினங்கள் என்பது கடை அலுவலகச்சிப்பந்திகள் சட்டத்தின் கீழ் கௌரவ தொழில் அமைச்சரினால் பிரகடனப்படுத்தப்பட்ட தினங்களேயாகும்.. இதற்கிணங்க 2007ம் வருடத்திற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள விடுமுறை நாட்கள், கீழ்க்குறிப்பிட்டவாறு இருக்க வேண்டுமென ஆணைக்குழுக் கட்டளைப்படி அறியத்தருகின்றது.

(01). தைப்பொங்கல் தினம்.
(02). தேசிய தினம்.
(03). மீலாத்துன் நபி (நபிகள் நாயகம் அவர்களின் பிறந்த தினம்)
(04). சிங்கள/தமிழ் புதுவருடத்திற்கு முன்தினம்
(05). சிங்கள/தமிழ் புதுவருட தினம்.
(06). மே தினம்.
(07). வெசாக் பூரண தினத்திற்கு மறுதினம்
(08). நத்தார் தினம்.

இவற்றுடள் மேற்குறிப்பிட்ட தினங்களுக்கு மேலதிகமாக கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரால், கூட்டுறவாளர்களின் திகதியாகப் பிரகடனப்படுத்தப்பட்ட திகதியும், தொடர்ந்தும் விடுமுறையாக வழங்கப்படல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட விடுமுறை நாட்கள் ஏதாவது சங்கத்தின் வாராந்தம் அளிக்கப்படும் விடுமுறை நாட்களுள் உட்படுத்தப்பட்டிருக்கும் பட்சத்தில் அதற்குப் பதிலாக பதில் விடுமுறையோ அல்லது சம்பளமாகவோ ஊழியரதும், சங்க நிர்வாகத்தினதம் இணக்கத்துடன் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு அடுத்தபடியாக வருகின்ற 30 நாட்களுக்குள் செலுத்தப்பட வேண்டும்.

11.02.2007 ந்திகதிய ஆணைக்குழுவின் கட்டளைப்படி.

பி.தயானந்தன்,
செயலாளர்,
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்

பிரதிகள் :- 01. கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் பதிவாளரும்
02. கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்